## நாடாளுமன்றத் தேர்தலில்

# பா.ஜ.க.வை வீட்டிற்கு அனுப்பி நாட்டிற்கு விடியலைத் தேடித் தாரீர்!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை... 11 ஆம் பக்கத் தொடர்ச்சி

260க்கும் அதிகமான திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தந்துள்ளார்.

இந்த வெவ்வேறு திட்டங்களுடைய அம்பாசிடர்களாக, தூதுவர்களாக நீங்கள் ஒவ்வொருவரும் செயல்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஒட்டுமொத்த இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமாக, ஒரே நம்பிக்கையாக, ஒற்றை நம்பிக்கையாக நம்முடைய தலைவர் அவர்கள் இருக்கிறார்கள்.

அதனால்தான், மத்திய பிரதேசத்தில் நடைபெறுகின்ற பா.ஜ.க. கூட்டத்தில், நம்முடைய பிரதமர் மோடி அவர்கள், தி.மு.க.வை விமர்சித்துப் பேசுகிறார்.

எங்கே சென்றாலும், அவருக்கு தி.மு.க. ஞாபகம்தான். தி.மு.க.விற்கு வாக்களித்தால், கலைஞர் குடும்பம் மட்டும்தான் பயனடையும் என்று பிரதமர் மோடி அவர்கள் கூறுகின்றார்.

### வெளிநாடுகளுக்கு அதானி இல்லாமல் செல்லமாட்டார்!

2014 ஆம் ஆண்டிலும், 2019 ஆம் ஆண்டிலும், உங்கள்மீது நம்பிக்கை வைத்து, பா.ஜ.க.விற்கு மக்கள் வாக்களித்தனர்.

ஆனால், அதனால் பயனடைந்தது யார்?

உங்களுடைய நெருங்கிய நண்பர் திரு.அதானி அவர்கள்தான்.

இந்தியா அதனால் பயனடைந்ததா?

அந்த அதானி யார் என்று உங்களுக்கெல்லாம் தெரியும்.

ஒன்றியப் பிரதமர் மோடியினுடைய மிகமிக நெருங்கிய நண்பர் அவர்.

நான்கூட ஒருமுறை சொன்னேன், மோடி அவர்கள் நிறைய வெளிநாடுகளுக்குப் பயணம் செய்வார்; விமானி இல்லாமல்கூட அவர் போவார்; ஆனால், அதானி இல்லாமல் போகமாட்டார்.

பிரதமர் வெளிநாட்டிற்குச் செல்வதே, அதானியினுடைய விமானத்தில்தான். ஹிண்டன்பர்க் என்கிற ஓர் அமெரிக்க நிறுவனம், ஓர் ஆய்வுத் தகவலை வெளியிட்டது.

அதானி நிறுவனம் கடந்த 10 ஆண்டுகளில் இவ்வளவு பெரிய வளர்ச்சியை எப்படி பெற்றது?

உலகப் பணக்காரர் வரிசையில் அதானி இரண்டாமிடம் பெற்றிருந்தார்.

ஒட்டுமொத்தமாக 68 லட்சம் கோடி ரூபாய்; கடந்த 9 ஆண்டுகளில் இவ்வளவு பெரிய வளர்ச்சி எப்படி வந்தது என்று அந்த முறைகேடுகளை எடுத்துச் சொல்லியிருந்தது அந்த ஆய்வுத் தகவல்.

இதுகுறித்து நம்முடைய காங்கிரஸ் பேரியக்கத்தின் மேனாள் தலைவரும், நம்முடைய அருமை நண்பர் ராகுல் காந்தி அவர்கள், நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி, அதற்கு விளக்கம் சொல்லவேண்டும் என்று கேட்டார்.

இதற்கு பிரதமர் மோடி அவர்கள் விளக்கம் தரவில்லை. நாட்டில் இருக்கும் பொதுத் துறை நிறுவனங்களை அதானியிடம் கொடுத்துவிட்டார்.

அதானி ஏர்போர்ட்

அதானி துறைமுகம்

அதானி ரயில்வே நிலையம்

அதானி சாலை

என்று மாறியிருக்கிறது.

இதற்கெல்லாம் பதிலளிக்க முடியாதவர்கள்தான் நம்மைப் பார்த்து, தி.மு.க.வைப் பார்த்து விமர்சிக்கின்றார்கள்.

ஆனால், 2021 இல் நடைபெற்ற தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில், தி.மு.க.விற்கு மக்கள் வாக்களித்தனர்.

அதனால், இன்றைக்குத் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் பயனடைந்து வருகின்றன.

எனவே, இந்தத் தமிழ்நாடுதான், மோடி அவர்கள் சொல்லுகின்ற கலைஞருடைய குடும்பம்.

வாக்களித்தவர்கள் மகிழுகின்ற வகையிலும், வாக்களிக்காதவர்கள் வாக்களிக்காமல் விட்டுவிட்டோமே என்று வருகின்ற அளவிற்கு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திட்டங்களைத் தீட்டி வருகின்றார்.

தக்காளி உள்ளிட்ட அத்தியாவசி உணவுப் பொருள்களின் விலை வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்து கொண்டிருக்கின்றன. அதைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டிய நம்முடைய பிரதமர், இன்றைக்குப் பிரான்சில் இருக்கிறார்.

மணிப்பூர் மாநிலம் கடந்த நான்கு மாதங்களாகப் பற்றி இருக்கிறது. 150 பேருக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஆனால், மோடி அவர்கள், பேச்சுவார்த்தை நடத்தக்கூட அவர்களை அழைக்கவில்லை.

ஆட்சிக்கு வந்தவுடன், ஒவ்வொரு குடிமகனின் வங்கிக்கணக்கிலும் 15 லட்சம் ரூபாய் செலுத்துவோம் என்று அன்று வாக்குறுதி அளித்தார் மோடி அவர்கள்.

ஆனால், அப்படியெல்லாம் சொல்லவில்லை; நீங்கள் பொய் சொல்கிறீர்கள் என்று இன்றைக்குச் சொல்லுகிறார்.

### வானதி சீனிவாசனுக்கு ஆதாரங்களைத் தரத் தயார்!

பா.ஜ.க.வினுடைய சட்டமன்ற உறுப்பினர் அக்கா வானதி சீனிவாசன் அவர்கள், நான் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று சொல்கிறார்.

நான் மீண்டும் சொல்கிறேன், மன்னிப்பு கேட்கமாட்டேன்; மோடி சொன்னது உண்மை; எங்கே பேசினார்? எப்பொழுது பேசினார்? என்பதையும் நான் தேதியோடு சொல்கிறேன்.

2013 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 7 ஆம் தேதி, சட்டீஸ்கர் மாநிலம் காங்கர் மாவட்டத்தில் நடைபெற்ற ஒரு பிரச்சார கூட்டத்தில்தான், "நாங்கள் ஆட்சிக்கு வந்தால், வெளிநாட்டில் உள்ள கருப்புப் பணத்தையெல்லாம் மீட்டு, ஒவ்வொரு குடிமகனின் வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் ரூபாய் போடுவோம்" என்று மோடி அவர்கள்தான் கூறினார்.

அதனை அமித்ஷா அவர்களும், அருண்ஜெட்லி அவர்களும் நாடாளுமன்றத்திலேயே ஒப்புக்கொண்டுள்ளனர்.

வேண்டுமானால், நான் ஆதாரங்களைத் தருவதற்கும் தயாராக உள்ளேன்.

பொய்களைப் பரப்பி, பொய்களையே பேசுவதால், உண்மைகள் பா.ஜ.க.வினுடைய கண்களுக்கு எப்பொழுதும் தெரியவில்லை.

இங்கே இன்னொருவர் தி.மு.க. மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். யார்? எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

நான் சொல்கிறேன், நீங்களும், மோடி அவர்களும், தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் இழைத்திருக்கின்ற அத்துணை கேடுகளுக்கும், அநீதிகளுக்கும் நீங்கள்தான் வருகின்ற 2014 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் மன்னிப்புக் கேட்கவேண்டும்.

ஆளுநர் டில்லிக்குச் சென்று வந்திருக்கின்றார். 10 நாள்களுக்கு ஒரு முறை டில்லிக்குப் போகிறார்.

என்னிடம் பத்திரிகையாளர்கள் கேட்டார்கள், ஆளுநர் டில்லிக்குப் போயிருக்கிறாரா? என்று.

அவருக்கு இங்கு ஒன்றும் வேலையில்லை; அதனால் போய்விட்டு வருகிறார்.

அவருக்கு மூக்கறுபடுவதுதான் ஒரே வேலை.

சட்டமன்றத்தில் ஆளுநர் உரை என்பதை ஆளுநர் படிக்கவேண்டும்; எழுதி கொடுப்பது நம்முடைய முதலமைச்சரும், அமைச்சரவையும்தான்.

அப்படி கொடுத்த உரையில் இருப்பதை ஆளுநர் தவிர்த்தார்; பெரியார் பெயரையும், அம்பேத்கர் பெயரையும், அண்ணாவின் பெயரையும் சொல்லாமல் தவிர்த்தார்.

அதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ஆளுநர் அவர்களே, நீங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் பதிவாகாது என்றார்.

உடனே ஆளுநர் அவர்கள் சட்டப் பேரவையிலிருந்து வெளியேறினார்.

### தமிழ்நாட்டின் பெயரையே மாற்றியிருப்பார்கள்!

அதுமட்டுமல்ல, இப்பொழுது அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்திருந்தால், தமிழ்நாட்டின் பெயரை மாற்றியிருப்பார்கள்.

ஆளுநர் ஒரு கூட்டத்தில் பேசுகிறார், தமிழ்நாடு என்கிற பெயர் சரியில்லை; பெயரை மாற்றவேண்டும் என்று.

உடனே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்து, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் எதிர்ப்புக் குரல் கொடுத்தவுடன், பிறகு ஆளுநர் பல்டி அடித்தார்.

தமிழ் மொழியை வளர்க்கவேண்டும் என்று மோடி அவர்கள், எங்கே போய் பேசினாலும் திருக்குறளை சொல்வார். குறிப்பாக தமிழ்நாட்டிற்கு வந்தால், திருக்குறளை சொல்லாமல், பேச்சை தொடங்கமாட்டார்.

### தமிழ்மொழியைப் பற்றிப்பேச பிரதமருக்கு தகுதி கிடையாது!

ஆனால், தமிழ் மொழியை வளர்ப்பதற்கு என்ன செய்திருக்கிறீர்கள்?

உலகத்தில் யாரும் பேசாத மொழியான சமஸ்கிருத மொழியை வளர்க்கவேண்டும் என்று 650 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது ஒன்றிய அரசு.

ஆனால், தமிழ் மொழியை வளர்ப்பதற்கு, ஒரு ரூபாயைக்கூட இந்த ஆண்டு ஒதுக்கவில்லை.

புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை டில்லியில் திறந்தார்கள். அந்த விழாவிற்கு யாரை அழைக்கவேண்டும்? குடியரசுத் தலைவரை அழைக்கவேண்டும். ஏன் அழைக்கவில்லை?

ஏனென்றால், குடியரசுத் தலைவர், அவர்களுடைய ஆள் இல்லை.

ஆனால், கலைஞர் மருத்துவமனையைத் திறப்பு விழாவிற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள், குடியரசுத் தலைவரை அழைத்தார்.

அதேபோன்று, சட்டமன்றத்தில் கலைஞருடைய சிலையை திறப்பதற்கு, ராம்நாத் கோவிந்த் அவர்களை அழைத்தார்.

ஆனால், புதிய நாடாளுமன்றத் திறப்பு விழாவிற்கு இங்கே இருக்கின்ற மடாதிபதிகளையெல்லாம் அழைத்துச் சென்றனர். நாங்கள் புதிய நாடாளுமன்றத்தில் செங்கோல் வைத்திருக்கிறோம், தமிழ்நாட்டு மக்கள் எங்களை ஆதரிக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். நீங்கள் செங்கோல் வைத்துவிட்டால், தமிழ்நாட்டு மக்கள் உங்களை ஆதரித்து விடுவார்களா?

இவர்களை இன்னொரு முறை ஆட்சியில் அமர வைத்தால், தமிழ்நாடு மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவையும் யாராலும் காப்பாற்ற முடியாது.

எப்படி அ.தி.மு.க. என்ற அடிமைகளை, 2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் விரட்டி அடித்தீர்களே, தமிழ்நாட்டிற்கு ஒரு விடியலைத் தந்தீர்களோ அதேபோல், இந்த பாசிஸ்டுகளை, அடிமைகளுடைய எஜமானர்களை 2024 இல் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில், நாம் அனைவரும் ஒன்றுபட்டு, அவர்களையெல்லாம் வீட்டிற்கு அனுப்பி, இந்தியாவிற்கு ஒரு விடியலைத் தேடி தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, கலைஞர் நூற்றாண்டு விழாவில் இதற்கான உறுதியை எடுத்துக்கொள்வோம் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த மாவட்டக் கழக செயலாளர் அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கும், வந்திருக்கக்கூடிய அத்துணை பயனாளிகளுக்கும் மீண்டும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.



177 வது வார்டு வேளச்சேரி ராஜலட்சுமி நகரில் அமைந்துள்ள சென்னை மேல்நிலைப்பள்ளியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 2022 –2023 ஆம் ஆண்டில் அதிக மதிப்பெண் எடுத்த மாணவ, மாணவியர்க்கு மாநில தேர்தல் பணி குழு செயலாளரும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி பொருளாளரும்,177 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பெ.மணிமாறன் ஊக்க தொகை மற்றும் அதற்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர் பெருமக்களுக்கு, பரிசு வழங்கினார்.. இந்நிகழ்வில் வேளச்சேரி மேற்கு பகுதி செயலாளர் அரிமா சு.சேகர்,178 வது மாமன்ற உறுப்பினர் எஸ். பாஸ்கரன்,176 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வே.ஆனந்தன், டான்சி நகர் நல்வாழ்வு சங்க செயலாளர் பாலகிருஷ்ணன், அன்னை இந்திரா நகர் நல்வாழ்வு சங்க தலைவர் குமாரராஜா, தண்டீஸ்வரர் நகர் நல்வாழ்வு சங்க தலைவர் டி.ஐவன்ஸ், மீசை ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (16.7.2023) மதுரையில் அண்மையில் மறைந்த மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலின் தக்கார் கருமுத்து கண்ணன் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.

## வாஷிங்டன் சிவா - நியுஜெர்சி பாலா வரவேற்புரை!

# அமெரிக்காவில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிகழ்வு!

## கவிஞர் இமயம் - புகழ்காந்தி - மருத்துவர் சோம இளங்கோவன் பங்கேற்பு!

*வாஷிங்டன், ஜூலை 16 -* அமெரிக்காவில் தி.மு.க., கலைஞர் அறக்கட்டளை மற்றும் அமெரிக்க தமிழர்கள் இணைந்து நடத்திய தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் "கலைஞர் நூற்றாண்டு நிகழ்வு" சீரும் சிறப்புமாக நடைப்பெற்றது.

தலைமை ஒருங்கிணைப்பாளர் வாசிங்டன் சிவா அனைவரையும் வரவேற்று பேசினார். அதனை தொடர்ந்து துணை ஒருங்கிணைப்பாளர் நியுசெர்சி பாலா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை கவிதையால் வாழ்த்தி அனைத்து பேச்சாளர்களையும் வரவேற்று ஒவ்வொரு நபராக பேச அழைத்தார். பெரியார் பன்னாட்டு மையத்தின் தலைவர் மருத்துவர் சோம. இளங்கோவன் நிகழ்வை துவக்கி வைத்து பேசினார்.

அமெரிக்காவிலிருந்து வாசிங்டன், நியுசெர்சி, டெலவேர், ப்ளோரிடா, டெக்சாஸ், டென்னிசி, மேரிலாந்து, கலிபோர்னியா, மிச்சிகன், சியாட்டல், ஒக்லஹோமா, கரோலினா ஆகிய 12 மாநிலங்களைச் சேர்ந்த தமிழர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைகளை பற்றி பேசினர்.

இந்த நிகழ்வில் தமிழ்நாட்டில் இருந்து கவிஞர் இமயம், அயலக அணி உறுப்பினர் புகழ்காந்தி, அமெரிக்கத் தமிழ் கல்வி கழகத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் முனைவர் அரசு செல்லையா, டென்னிசி மாநிலத்தை சேர்ந்த முன்னாள் பேராசிரியர் முனைவர் சுந்தரமூர்த்தி, மிசிக்கன் பல்கலைகழகத்தில் பணியாற்றும் பேராசிரியர் முனைவர் இராம் மகாலிங்கம், வடகரோலினாவை சேர்ந்த மருத்துவர் சரோஜா அம்மாள், விர்ஜினியாவை சேர்ந்த கவிஞர் கனிமொழி, சியாட்டலை சேர்ந்த அருள்மொழி, கலிப்போர்னியாவை சேர்ந்த டெய்சி, ப்ளோரிடா கோபிநாத் ராமசாமி, டாலஸ் சக்தி, பாண்டிமதி, சரவணக்குமார்,

இராம்குமார், நியுஜெர்ஸி மாநிலத்தை சேர்ந்த திணை ரவி, ராஜன், கோசல், பிரசாத் பாண்டியன் என பல்வேறு அமெரிக்கத் தமிழர்களும் பங்கு கொண்டு இணைய நிகழ்வை மிகசிறப்பாக நடத்தினார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் செய்த அரும் பெரும் சாதனைகளை கவிஞர் இமயம் எடுத்துரைத்தார். கலைஞர் தனக்கு கிடைத்த அங்கீகாரத்தின் பல்வேறு சட்டங்களை எப்படி இயற்றினார் எனவும், தமிழ் நாட்டில் கடைக்கோடி மக்களும் பயன் அடையும் வகையில் ரேஷன் கடை மூலம் அரிசி வழங்கி பசியை போக்கியதில் ஆரம்பித்து, கல்வியில், சாலை வசதியில், சொத்தில் சமபங்கு, வேலை வாய்ப்பு என தமிழ் சமூகம் மேம்பட வாழ்நாள் இறுதிவரை பேராடியவர் எனவும் எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியில் எண்ணற்ற இளைஞர்கள் கலந்து கொண்டு, முத்தமிழறிஞர் கலைஞரின் டைடல் பார்க் மூலம் நடந்த கணனி புரட்சி, சாலை வசதிகள், பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்கள் வருகை, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆன திட்டம், மொழிக்கும், இனத்திற்கும் முன் உரிமை என அமெரிக்கா, வியட்நாம், சௌதி அரேபியா, கத்தார், ஓமன், தமிழ்நாடு என பல்வேறு தேசங்களில் இருந்து கலந்துகொண்டு கலைஞர் நூற்றாண்டில் கலைஞரின் சாதனைகள் குறித்து உரையாற்றினார்கள்.

நிகழ்வின் இறுதியில் கலைஞர் என்ற மாபெரும் ஆளுமைக்கு நியுசெர்சி மாநிலம் எடிசன் நகரின் ஜனநாயக கட்சி தலைவர் மகேஷ் பாக்யா அவர்கள் கலைஞருக்கு மரியாதை செலுத்தும் விதமாக "Certificate of Proclamation" அளித்தது வாசிக்கப்பட்டது.

துணை ஒருங்கிணைப்பாளர் நியுசெர்சி பாலா அவர்கள் ஜனநாயக கட்சி தலைவரைச் சந்தித்து அதனை பெற்றுக்கொண்டு, அதனை நிகழ்ச்சியில் படித்துகாண்பித்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசியல், சமுதாய பணி, தமிழ் மொழிக்கான வளர்ச்சி, தமிழ் இனத்திற்காக நீண்ட பெருகாலம் சேவை செய்ததை பாராட்டி அந்த பிரகடனம் பாராட்டு பத்திரம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியின் இறுதியில் கலைஞர் 100 நூற்றாண்டு நிகழ்வில், அதன் துணை ஒருங்கிணைப்பாளர் டெக்ஸாஸ் பாண்டிமதி துரைராஜ் எல்லோருக்கும் நன்றி கூறி பாராட்டினார்.

# அண்ணனுக்கு ஒரு நீதி! தம்பிக்கு ஒரு நீதியா?

ஒரே நாடு
ஒரே கார்டு
ஒரே மொழி
ஒரே தேர்தல்
என்ற பிரதமர்

போபால் கூட்டத்தில்
முழங்குகிறார்

ஒரே பொது சிவில் சட்டம்

ஒரே வீட்டில்
அண்ணனுக்கு ஒரு நீதி
தம்பிக்கு ஒரு நீதியா?

அய்யம் எழுப்புகிறார்

ஒரே வீடுதான்
ராமனுக்கு ஒரு மனைவி
அப்பா தசரதனுக்க
அப்படியா?

ஒரே வீடுதான்
அண்ணன் உள்ளாடை
தம்பிக்கு பொருந்துமா?

ஒரே வீடுதான்
அய்யப்பன் கோவிலுக்கு
அண்ணன் போகலாம்
அக்காவுக்கு
அனுமதி உண்டா?

ஒரே வீடென்றால்
அப்பா பார்க்கும்
இந்தி படத்தைதான்
அம்மாவும்
பார்க்க வேண்டுமா?
அவளுக்கு
ஃபகத் பாஸில் பிடிக்கிறதே
என்ன செய்ய?

யானையும்
சிங்கமும் வாழ்வது
ஒரே காடுதான்
பசியெடுத்தால்
இரண்டும்
மான்குட்டிகளை
சாப்பிடுமா?

ஒரே கூட்டில்
வளர்ந்தவை
என்பதற்காக
குயிலும்
காகமும்
ஒரே குரலில்
பாடுமா ?

அரசியல்வாதிகளான
அஜித் பவாருக்கும்
செந்தில் பாலாஜிக்கும்
ஒரே சட்டம் இல்லை
எனும்போது

பிரதமர் அவர்களே
அஞ்சலைக்கும்
ஆபிதவுக்கும்
ஒரே தாலி சாத்தியமா

சிதம்பரம் தீட்சதர்கள்
கோர்ட்டில்
மனு நீதியைக் காட்டுகிறார்கள்

ராமர் கோவில் வழக்கில்
வக்கீல் வால்மீகியை
வாசித்துக் காட்டுகிறார்

குடமுழுக்கில்
தமிழ் எங்கே?
கேட்டால்
ரிக் யஜுர்
சாம அதர்வணம் காட்டி
வாய்தா வாங்குகிறார்கள்

ஆனால்
இமாம்களிடமிருந்து
குர்ரானையும்
பாதிரியார்களிடமிருந்து
பைபிளையும்
சீக்கிய குருமார்களிடமிருந்து
குரு கிரந்த் சாகிப்பையும்
பிடுங்கிக் கொண்டு
இபிகோவை
வாசிக்கச் சொல்கிறீர்கள்

இந்தியாவுக்கு
ஒரு பொது சிவில் சட்டம்
போதுமென்றால்

பாராளுமன்றம் இருக்க
சட்டமன்றங்கள் ஏன்?
நாளை
கேட்க மாட்டீர்களென்பது
என்ன நிச்சயம்?

பிரதமர் அவர்களே,
இந்தியர் எல்லோரும்
திருப்பதி லட்டையும்
பழனி பஞ்சாமிர்தத்தையும்
சாப்பிட்டு பசியாற முடியாது

சட்டம்போட்டு
கல்யாண விருந்தில்
பீஃப் பிரியாணியை
தடுக்க முடியாது

ஏனென்றால்
பிரதமர் அவர்களே,
இந்தியா ஒரு வீடல்ல
அது ஒரு அபார்ட்மெண்ட் .

**நன்றி: குமுதம்**